ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1756/32 - 2012 මැයි 04 වැනි සිකුරාදා - 2012.05.04
1756/32 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

கட்டளை இல. 20.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

20(5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 20 (5) இனால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது உற்பத்தியாளர், வியாபாரி, இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தர் எவரும் கீழே தரப்பட்டுள்ள ஆகக் கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேல் ஏதேனும் முழு ஆடைப்பால்மாவினை விற்பனை செய்யவோ விற்பனைக்கு வைக்கவோ அல்லது விற்பனைக்கு கோரவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாதெனக் கட்டளையிடுகின்றது.

| | ஆகக் கூடிய சில்லறை விலை |
|---|---|
| 400 கிராம் முழு ஆடைப்பால் மா பைக்கற் | 325 ரூபா |
| 1 கிலோ கிராம் முழு ஆடைப்பால் மா பைக்கற் | 810 ரூபா |

400 கிராமிற்கு உட்பட்ட அனைத்து முழு ஆடைப்பால் மா பைக்கற்களின் ஆகக்கூடிய சில்லறை விலை 100 கிராம் 81.25 ரூபாவுக்கு மேற்படாத விகிதபாகமாகவும், அதேவேளை 400 கிராமிற்கு மேற்பட்ட அனைத்து முழு ஆடைப்பால் மா பைக்கற்களின் ஆகக்கூடிய சில்லறை விலை 100 கிராம் 81 ரூபாவிற்கு மேற்படாத விகிதபாகமாகவும் இருத்தல் வேண்டும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது 2012, மே 03 ஆம் திகதிய 1756/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பால் மாவின் ஆகக் கூடிய சில்லறை விலையை நிர்ணயித்த 19 ஆம் இலக்க கட்டளையை, இக்கட்டளையினால் இரத்துச் செய்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,
கொழும்பு,
2012, மே 04.

05-521